பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

21 03 2024 **THURSDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர்கள் பிற பணியைச் சேர்ந்த அலுவலர்களாக இருந்தால், அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

2. அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் கூட்டம் நாளை மறுநாள் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறும் என்று தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ கூறியுள்ளார்.

3. மாநிலத்தின் முன்னாள் அமைச்சர்கள் மீதான முறைகேடுகளை விசாரிப்பது தொடர்பான அனுமதி சிபிஐக்கு வழங்கப்பட்டுள்ளதாக உயர்நீதிமன்றத்தில் சிபிஐ தெரிவித்துள்ளது.

4. இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் மூலம் அக்னிபாண் சிறியவகை ராக்கெட் நாளை காலை மணி 6.30-க்கு விண்ணில் செலுத்தப்படவுள்ளதாக இஸ்ரோ கூறியுள்ளது.

5. சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ் மற்றும் பிரியன்சு ரஜாவத் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>><<<<<

மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர்கள பிற பணியைச் சேர்ந்த அலுவலர்களாக இருந்தால், அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும் என்று மாநில அரசுகளுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக விவாதித்த தலைமை தேர்தல் ஆணையர் தலைமையிலான குழு, குஜராத், பஞ்சாப், ஒடிசா, மேற்குவங்கம் ஆகிய மாநிலங்களில் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர் பதவிகளில் உள்ள பிற பணி அலுவலர்களை இடமாற்றம் செய்து உத்தரவிட்டுள்ளது.

மேலும், பஞ்சாபின் பத்திண்டா, அஸ்ஸாமின் சோனித்பூர் ஆகிய மாவட்ட கண்காணிப்பாளர்களையும் ஆணையம் இடமாற்றம் செய்துள்ளது.

இம்மாவட்டங்களில் மக்கள் பிரதிநிதியாக உள்ளவர்கள் இந்த இருவருக்கும் குடும்ப உறவினர்களாக இருப்பதால், நேர்மையான தேர்தல் நடவடிக்கைக்கு வழிகோலும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் உள்ள அனைத்துக் கட்சி பிரதிநிதிகளின் கூட்டம் நாளை மறுநாள் தலைமைச் செயலகத்தில் நடைபெறும் என்று தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாஹூ கூறியுள்ளார்.

சென்னையில் இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், நண்பகல் 12 மணிக்கு இந்த கூட்டம் தொடங்கும் என்றும், தேர்தல் தொடர்பான விளக்கங்கள் மற்றும் கேள்விகளுக்கு பதிலளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

>>>>><<<<<

தேர்தல் நடத்தை விதிகளை மீறி பொது இடங்களில் உள்ள சுவரொட்டிகள், ஓவியங்களை உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக அனைத்து மாநில தலைமைச் செயலாளர்கள் மற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில், பல இடங்களில் அனுமதி இல்லாத சுவரொட்டிகள், ஓவியங்கள் அகற்றப்படாமல் உள்ளதாக புகார்கள் வந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

ஆணையத்தின் அறிவுறுத்தல்கள் முழுமையாக பின்பற்றப்பட வேண்டும் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது.

எனவே அனுமதி இல்லாத அரசியல் விளம்பரங்களை உடனடியாக அகற்ற மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இது தொடர்பான அறிக்கையை இன்று மாலை ஐந்து மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

நாடுமுழுவதும் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதற்காக பறக்கும் படையினர் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே தமிழகத்தில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்ட வாகன சோதனையின்போது திருச்சியில் 42 லட்சம் ரூபாயையும், விழுப்புரத்தில் 30 லட்சம் ரூபாயையும், நாமக்கல்லில் ஒரு லட்சம் ரூபாயையும், மதுரையில் சுமார் ஒன்றரை லட்சம் ரூபாயையும் பறிமுதல் செய்துள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம், செந்நீர்குப்பம் அருகே மேற்கொண்ட சோதனையின் போது ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 1 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் கைப்பற்றப்பட்டது.

>>>>><<<<<

காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்கு உள்நோக்கத்துடன் முடக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று அக்கட்சியின் மூத்த தலைவர்களுடன் கூட்டாக சந்தித்துப் பேசிய செய்தியாளர்களிடம் அவர், நேர்மை மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் தங்கள் கட்சியின் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டுள்ளது ஒருதலைபட்சமான செயல் என்றும் குற்றம் சாட்டினார்.

கட்சியின் வங்கிக் கணக்கு முடக்கப்பட்டதை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் என்றும், இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முன்னாள் தலைவர் திருமதி சோனியா காந்தி தெரிவித்தார்.

இந்த செய்தியாளர் சந்தின்போது கட்சியின் மூத்த தலைவர்கள் திரு. ராகுல் காந்தி திரு. அஜய் மக்கான் ஆகியோர் உடனிருந்தனர்.

>>>>><<<<<

தமிழக முன்னாள் அமைச்சர்கள் மீதான முறைகேடுகளை விசாரிப்பது தொடர்பான அனுமதி சிபிஐக்கு வழங்கப்பட்டுள்ளதாக சிபிஐ உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் தடையை மீறி முறைகேடுகள் நடைபெற்றதாகவும், தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதாகவும் எழுந்த புகாரில் தில்லி சிபிஐ வழக்கை விசாரித்து வருகிறது.

இந்நிலையில், அமலாக்கத்துறை அதிகாரிகள், முன்னாள் அமைச்சர் திரு. விஜயபாஸ்கருக்கு சொந்தமான அலுவலகங்கள் மற்றும் வீடுகளில் இன்று சோதனை மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ராஜஸ்தான், ஹரியானா மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் பொதுத்தேர்தலுக்கான பொறுப்பாளர்களை பிஜேபி நியமனம் செய்துள்ளது.

புதுதில்லியில் இன்று வெளியிடப்பட்ட அறிக்கையில், ராஜ ஸ்தானில் டாக்டர் வினெய், திருமதி விஜயா ரெஹாடகர், திரு. பிரவேஷ் வர்மா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஹரியானாவில் சத்திஷ்புனியா, சுரேந்திர சிங் நாகரும், ஆந்திரப்பிரதேசத்தில் அருண் சிங் மற்றும் சித்தார்த் நாத் சிங் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் மூலம் அக்னிபாண் சிறயவகை ராக்கெட் நாளை காலை மணி 6.30-க்கு விண்ணில் செலுத்தப்படுகிறது.

மூன்று கட்டங்களாக செயல்படும் இந்த ராக்கெட், ஸ்ரீஹரிக்கோட்டாவிலிருந்து புறப்பட்ட 5 நிமிடங்களுக்குள் பரிசோதனை முடித்து, கடலில் இறக்கப்படும்.

தனியார் ஏவுதளத்தின் தரத்தை உறுதி செய்வதற்காக இந்த ராக்கெட் சோதிக்கப்படும் என்று அக்னிகுல் காஸ்மோஸ் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

சிறியவகை ராக்கெட்டுகளை, குறைந்த புவிவட்ட தூரத்தில் செலுத்தி பரிசோதனை செய்வதற்காக இந்த ராக்கெட் அனுப்பப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

விண்வெளித் துறையில் தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.

18 மீட்டர் நீளமுள்ள இந்த ராக்கெட் 700 மீட்டர் தொலைவில் பரிசோதிக்கப்படும் என்று அவர் கூறினார்.

>>>>><<<<<

உச்சநீதிமன்றத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு உதவி மையத்தை தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் இன்று திறந்து வைத்தார்.

அப்போது பேசிய அவர், மாற்றுத் திறனாளிகளுக்கு பயனளிக்கும் வகையில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கிய நீதிபதி ரவீந்திர பட் குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றும் வகையில் இந்த உதவி மையம் அமைக்கப்படுவதாக தெரிவித்தார்.

மேலும் அந்த குழுவின் ஆலோசனைப்படி உச்சநீதிமன்றத்திற்கு வரும் மூத்த குடிமக்கள், கர்ப்பிணி பெண்கள் உள்ளிட்டோருக்கும் சிறப்பு வசதிகள் செய்து தரப்படும் என்றும் தலைமை நீதிபதி கூறினார்.

>>>>><<<<<

உலகப்புகழ் பெற்ற திருவாரூர் தியாராஜர் ஸ்வாமி திருக்கோவிலின் ஆழித்தேர் திருவிழா தற்போது வெகுவிமரிசையாக நடைபெற்று வருகிறது.

இந்த திருவிழாவை ஒட்டி உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ்பைட் - விஜயகுமார் 31 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

ஹோலிப் பண்டிகையின் போது பயணிகளின் நெரிசலை குறைப்பதற்கு கூடுதல் ரயில்களை இயக்கவுள்ளதாக ரயில்வே அறிவித்துள்ளது.

தில்லியிலிருந்து பீகார், உத்தரபிரதேசம், மேற்கு வங்கம், மகாராஷ்ட்ரா, ராஜஸ்தான், குஜராத் ஆகிய மாநிலங்களுக்கு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

உலக காடுகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காடுகளை பாதுகாப்பது தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு காடுகளை பாதுகாப்பதும், மரங்கள் வளர்ப்பதும் அவசியமாகும்.

இதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21-ஆம் தேதியை உலக காடுகள் தினமாக ஐ நா அறிவித்துள்ளது.

2013-ஆம் ஆண்டு முதல் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

>>>>><<<<<

கடந்த ஆண்டு உலகின் அதிக வெப்பம் நிறைந்த ஆண்டாக இருந்தது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஐநா உலக வானிலை அமைப்பு தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் உலகளாவிய சராசரி மேற்பரப்பு வெப்பநிலை ஒன்று புள்ளி நான்கு ஐந்து டிகிரி செல்சியஸ் அதிகரித்து காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலில் பெரிய மாற்றங்கள் காணப்பட்டதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்த மாற்றங்கள், பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களை அதிகரிக்கக்கூடும். என்று அந்த அமைப்பு எச்சரித்துள்ளது.

>>>>><<<<<

சுவிஸ் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ் மற்றும் பிரியன்சு ரஜாவத் ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

**Basel** நகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் கிரண் ஜார்ஜ், 21-18, 21-19 என்ற செட்கணக்கில் ஜப்பானின் **Takuma Obayashi-**யை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் பிரியன்சு ரஜாவத், 21-12, 21-15 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் **Cheuk Yiu Lee –**யை வென்றார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் சிக்கி ரெட்டி – சுமித் ரெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

ப்ரைம் வாலிபால் போட்டியின் இறுதி ஆட்டத்தில் கோழிக்கோடு அணி இன்று சென்னை அணியை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி மாலை மணி 6-30-க்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

உலகக்கோப்பை கால்பந்து தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

>>>>>END<<<<<